**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 79/2019**

**பி.வா.சா. 2 - மீனா**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 13.10.2025.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

இவ்வழக்கில் நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் சமயத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் எனது கைவசம் இருந்ததா என்றால் இல்லை தாக்கல் செய்யும் சமயத்தில் தான் கைவசம் வந்தது. எனது கைவசம் யார் கொடுத்தது என்றால் 2 ம் பிரதிவாதி முத்துசாமி கொடுத்தார். நான் முதல் விசாரணையில் ஆபத்துகாத்த பிள்ளை மரணத்திற்கு பிறகு அவர்களது சட்டப்பூர்வமான வாரிசுகளான வேலாயும் பிள்ளை, ஆபத்துகாத்தபிள்ளை, விசாலாட்சி, சாந்தா, வேலம்மாள் ஆகியோர் இரண்டாம் பிரதிவாதிக்கு கூட்டு உரிமையை விடுதலை செய்து கொடுப்பதாக கூறியுள்ளது மேற்படி ஆபத்துகாத்த பிள்ளைக்கு எவ்வாறு மேற்படி நபர்கள் வாரிசு என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். முத்துசாமிபிள்ளையை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 30 வருடமாக தெரியும். நான் முப்பது வருடமான எங்கு தாமசித்து வருகிறேன் என்றால் இரவிபுதூரில் தாமசிதது வருகிறேன். நான் திருமணம் செய்து கொடுத்த ஊர் இரவிபுதூர். எனது சொந்த ஊர் என்ன என்றால் குலசேகரன்புதூர்.

இரவிபுதூரில் இருந்து குலசேகரன்புதூர் சுமார் எத்தனை கி.மீ தூரம் இருக்கும் என்றால் சுமார் 2, 3 கி.மீ தூரம் இருக்கும். 2ம் பிரதிவாதி எங்கு தாமசம் என்றால் நாகர்கோவில் புத்தேரி மடத்தில் தாமசம். இரவிபுதூரில் இருந்து புத்தேரி மடம் சுமார் 12 கி.மீ

தூரம் இருக்கும் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் தெரியாது. அவரது மனைவி மற்றும் குழந்தைகளை தெரியுமா என்றால் தெரியும் இரண்டு குழந்தைகள் விசேஷங்களுக்கு ஊருக்கு வரும் சமயத்தில் எனக்கு தெரியும். முப்பது வருடங்களாக எனக்கு இவ்வாறு விசேஷங்களுக்கு வரும் சமயத்தில் தான் தெரியும் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் தந்தையின் பெயர் என்ன என்றால் வேலாயுதம் பிள்ளை. 2ம் பிரதிவாதிக்கோ அவரது தந்தைக்கோ இரவிபுதூரில் வீடு கிடையாது என்றால் சரியல்ல அவர் தந்தைக்கு வீடு உண்டு. அது என்ன சொத்து என்றால் நான் கிரயம் பெற்ற சொத்து. 2ம் பிரதிவாதி அவரது தந்தையின் சொத்து என்று கூறி தான் எனக்கு கிரயம் கொடுத்தார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் தந்தையின் பெயரில் பட்டா உள்ளதா என்றால் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம்.

நான் கிரயம் வாங்கும் சமயத்தில் வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். எத்தனை வருடத்திற்கு வில்லங்கம் பார்த்தேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என் மகன் தான் பார்த்து வந்தான். எனது மகன் எத்தனை வருடத்திற்கு வில்லங்கம் பார்த்தேன் என்று கூறினாரா என்றால் கூறவில்லை. எனது மகன் வில்லங்கம் பார்த்ததாக நான் தாக்கல் செய்த எதிருரையிலோ முதல் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான் நானும் எனது மகனும் சேர்ந்து தான் பார்தோம் என்று தற்போது சாட்சி கூறுகிறார். நான் கிரயம் பெற்ற சமயத்தில் ஆவணத்தில் யாரெல்லாம் சாட்சி கையொப்பம் செய்தார் என்றால் நான் தான் கையொப்பம் செய்தேன் சாட்சி கையொப்பம் யாரும் இடவில்லை. 2ம் பிரதிவாதியும் நானும் எனது கணவர் வழியாக உறவினர்கள் என்றால் சரிதான். எவ்வாறு உறவு முறை என்றால் முத்துசாமி 2ம் பிரதிவாதியின் தந்தையும் எனது கணவரின்

தந்தையும் சகோதரர்கள். நான் 2ம் பிரதிவாதிக்கு வழக்கு பட்டிகை சொத்தை அபகரிக்க வேண்டி எனது பெயரில் ஒரு போலியான ஆவணத்தை உருவாக்கி நானும் 2ம் பிரதிவாதியும் எனது கணவரும் சேர்ந்து நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்த வரையில் 2ம் பிரதிவாதி ஊருக்கு வந்து தங்கியது கிடையாது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்திற்கு இரண்டு புறமும் வாதியின் சொத்து என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்திற்கு தெற்கு வாதியின் சொத்து, வடக்கு திருமால்பிள்ளையின் சொத்து என்றால் சரிதான் திருமால் பிள்ளை வாதியின் அப்பா என்றால் சரிதான். கிழக்கு யார் சொத்து என்று தெரியாது. வடக்கு பக்கம் உள்ள சொத்தை 2ம் வாதி கண்ணனுக்கு கிரயம் கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். வழக்கின் எதிருரை நானும் குப்புசாமி என்பவரும் சேர்ந்து தான் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான்.

வழக்கு பட்டிகை சொத்தில் ஒரு ஓடுபோட்ட கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் போர்வெல் போடுவதற்கு யார் ஏற்பாடு செய்தது என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதிக்கு பட்டிகை சொத்தை யார்கைவசம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீட்டில் வாதி வாதியின் தந்தை தாயார் கைவசம் வைத்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் போர்போடும் சமயத்தில் நான் சொத்திற்கு பார்வையிட வரவில்லை என்றால் சரியல்ல நான் தான் வந்தேன். போர் போட அடிக்கு எத்தனை ரூபாய் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது மொத்தமாக தான் பேசினோம். போர் எத்தனை இஞ்ச்விட்டத்தில் போடப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 2ம் பிரதிவாதிக்கு வேண்டி

சாட்சியம் அளிக்கிறேன் எனக்கோ 2ம் பிரதிவாதிக்கோ சொத்தில் எவ்வித உரிமையோ அனுபவமோ கிடையாது என்றால் சரியல்ல.

நான் வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்துப்பார்த்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது நான் படிக்கவில்லை. நான் எதிர்ருரையை திருத்தம் செய்ய வேண்டியும் கூடுதல் எதிர்உரை தாக்கல் செய்யவும் மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி மற்றும் எனது பெயரில் உள்ள விலைபத்திரம் நடைமுறைக்கு வரவில்லை அது போலியான ஆவணம் என்றால் சரியல்ல. நான் 02.05.2019 அன்று ஆட்கள் வைத்து போர்வெல் போடுவதற்காக முயற்ச்சி செய்தேன் என்றால் சரியல்ல நான் போர்போட்டபின்பு தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நான் போர்போடுவதற்கு முன்பாகவே வாதிகள் தடுத்துவிட்டனர் போர் போட்டுமுடிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் அனைவரும் அடுத்தடுத்த வீட்டில் தாமசம் என்றால் சரிதான். நான் பத்திரம் விலைக்கு வாங்கும் சமயத்தில் 2ம் பிரதிவாதியிடம் எத்தனை லட்சம் ரூபாய் கொடுத்தேன் என்றால் ரூ. 2,75000/- ரூபாய் கொடுத்தேன். வங்கிமூலமாக கொடுத்தேனா என்றால் நேரடியாக கையில் தான் கொடுத்தேன். வங்கியில் நகை அடகு வைத்து பணம் எடுத்துக்கொடுத்தேன் என்றால் சரிதான்.

எனது வங்கி கணக்கு புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்ய இயலாது அது வங்கியில் உள்ளது. எனது வங்கி கணக்கு எந்த வங்கியில் உள்ளது என்றால் வங்கியில் எனக்கு கணக்கு கிடையாது மருங்கூரில் உள்ள அரசு வங்கியில் பெயர் தெரியவில்லை அடகு வைத்தேன். வங்கி கணக்கு இல்லாமல் வங்கிகளில் அடகு வைக்க இயலாது நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான்

2ம் பிரதிவாதியிடம் கிரயம் பெறும் சமயம் 2ம் பிரதிவாதிக்கு எந்த பிரதிபலனும் கொடுக்காமல் பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. ஆகையால் மேற்படி ஆவணத்தின் படி எவ்வித உரிமையும் எனக்கு கிடைக்கப்பெறவில்லை என்றால் சரியல்ல. அடமான தொகை ரூபாய் 400ஐ 2ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் கொடுத்ததாக கூறினாரா என்றால் கூறினார் எதிருரை தாக்கல் செய்யும் சமயத்தில் கூறினார். மேற்படி ரூ.400யை நீதிமன்றத்தில் அதற்கு பின் கட்டிவைத்தீர்களா என்று 2ம் பிரதிவாதியிடம் கேட்டேனா என்றால் கேட்கவில்லை.

2ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தவிபரம் தெரியுமா என்றால் தெரியும். 2 ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் என்னென்ன சாட்சியம் அளித்தார் என்ற விபரம் எனக்கு கூறினார் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் வரி ரசீது, வீடு கட்டிய ரசீது அனைத்தும் யார் பெயரில் இருந்தது என்றால் 2ம் பிரதிவாதியின் தந்தை பெயரில் இருந்தது. மேற்படி ரசீதை வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன் என்னிடம் தந்து விட்டார் என்னிடம் உள்ளது. மேற்படி ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் தாக்கல் செய்ய இயலும். நான் கிரய பத்திரம் எனது பெயரில் எழுதிய பின்பு அடமானத்தை மீட்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. எனது பெயரில் பட்டா வாங்கிய பின்பு கரத்தீர்வை செலுத்தினேனா என்றால் கரத்தீர்வை செலுத்தியபின் தான் பட்டா பெயர் மாற்றம் செய்தேன். கரத்தீர்வை செலுத்த மற்றும் பட்டா பெயர் மாற்றம் செய்ய எவ்வளவு ரூபாய் செலவானது என்றால் 1000/- ரூ மகனிடம் கொடுத்து பட்டா பெயர் மாற்றம் செய்தேன் நான் செல்லவில்லை.

தாசில்தாரோ கிராமநிர்வாக அலுவலரோ என்னை விசாரித்தார்களா என்றால்

இல்லை. 2ம் பிரதிவாதி எழுதிய ஆவணம் பொய்யான ஆவணம் உண்மையில் அவர்கள் ஆபத்துகாத்த பிள்ளையின் வாரிசுகள் கிடையாது என்றால் சரியல்ல. எந்த தேதியில் எனது பெயரில் கிரயபத்திரம் எழுதினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எந்த வருடம் என்று தெரியுமா என்றால் கொரோனா காலத்திற்கு முன்பாக 2020 ல். மேற்படி போலியான ஆவணங்கள் அனைத்தும் வெளியில் தெரியாமல் மறைத்து வைத்துவிட்டு 02.05.2019 அன்று திடீரென பட்டிகை சொத்தில் வந்து ஆழ்துழாய் கிணறு போட வந்தபோது மேற்படி போலியான ஆவணங்கள் வாதிகளுக்கு தெரிய வந்து அவர்கள் 11.01.2019 ல் ஆவணங்களை நகல் எடுத்து பார்க்கும் சமயத்தில் பட்டிகை சொத்தை அபகரிக்க வேண்டி நானும் 2ம் பிரதிவாதியும் சேர்ந்து சட்டத்திற்கு புறம்பாக ஆவணங்கள் தயார் செய்தது தெரியவந்தது உடனே இவ்வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தில் இருந்த வீட்டிற்கு வாதிகளின் தாயர் செண்பக வல்லி பெயரில் கரம் செலுத்தி வந்தார்கள் அவர்கள் தான் வழக்கு பட்டிகை சொத்தை குடும்பமாக அனுபவித்து வந்தார்கள் அவர்கள் தாயார் இறந்த பிறகு வாதிகளின் கூட்டு அனுபவத்தில் பட்டிகை சொத்து உள்ளது என்றால் சரியல்ல. என்கோ 2ம் பிரதிவாதிக்கோ வழக்கு பட்டிகை சொத்தில் உரிமை கோர எவ்வித காரணமும் இல்லை என்றால் சரியல்ல. பட்டிகை சொத்தில் உண்மையான முதல் உரிமைதாரர் ஆபத்து காத்தபிள்ளையின் வாரிசுகள் 2ம் பிரதிவாதியோ கூட்டுவிடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்த நபர்களோ கிடையாது என்றால் சரியல்ல. அடமான பத்திரப்படி ஆறு வருட காலத்திற்குள் முதல் உரிமைதாரர் திருப்பாததால் சொத்தின் உரிமை மற்றும் அனுபவம் காலவரம்பு ஆகிவிட்டது என்றால் சரியல்ல. ஆகையால் வாதிகள் வழக்கில் கோரியபடி பரிகாரங்கள்

கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியோ நானோ வாதிகளின் உரிமை மற்றும் உடமையை தொந்தரவு செய்யவோ பட்டிகை சொத்தில் அத்துமீறி நுழையவோ வேறு கட்டுமானங்கள் ஏதும் கட்டக்கூடாது என பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதி பெயரில் உள்ள 2507/2014 மற்றும் எனது பெயரில் உள்ள 2744/2017 எண் ஆவணங்கள் வாதிகளை கட்டுப்படுத்தாது விளம்புகை பரிகாரம் கிடைக்க வாதிகளுக்கு உரிமை உண்டு என்றால் சரியல்ல. நான் எதிருரை மற்றும் முதல்விசாரணையில் கூறியுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**